# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |


| 27 மே 2018 | மூவொரு இறைவன் பெருவிழா | இரண்டாம் ஆண்டு |
|---|---|---|




அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

# உங்கள் சிந்தனைக்கு

அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

இன்றைய நற்செய்தியில் மூவொரு இறைவனின் பெயர்கள் ஒரு சொற்கோவையாக நமக்குத் தரப்பட்டுள்ளன. ‘நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்’ (மத்தேயு 28:19) என்று வாசிக்கிறோம்.

இறைவன் ஒரே கடவுளாக, அதே வேளையில் மூன்று ஆள்களாக இருப்பது ஓர் இறையியல் மறைபொருள். இந்த மறைபொருளை நம் மனித அறிவாற்றலால் புரிந்து கொள்ள முடியாது, இறை நம்பிக்கையால் மட்டுமே ஏற்றுக் கொள்ளவே முடியும். இயேசு கிறிஸ்துவால் வெளிப்படுத்தப்பட்ட இந்த மறையுண்மையை ஓர் அடிப்படை நம்பிக்கைக் கோட்பாடாகவே நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

இயேசு வழியாகவே நாம் தந்தையை அறியவும், புரியவும் முடியும். அவரே இறைவனை நமது ‘வானகத் தந்தை’ (மத்தேயு 6:9) என்று நமக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவரே இறைத் தந்தையின் மண்ணக முகமாகவும் அடையாளமாகவும் இருக்கிறார். இயேசு ‘கடவுளுடைய மாட்சிமையின் சுடரொளியாகவும், அவருடைய இயல்பின் அச்சுப் பதிவாகவும்’ (எபிரேயர் 1:3) விளங்குகிறார் என்று எபிரேயர் திருமடலில் வாசிக்கிறோம். அதுபோல, இயேசுவே தூய ஆவியாரையும் நமக்கு அறிமுகம் செய்து வைத்தார். தந்தையிடமிருந்து புறப்படும் ஆவியானவர், ‘அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்’ (யோவான் 15:26) என்றார் இயேசு.

இவ்வாறு, தந்தை, மகன், தூய ஆவியார் என்னும் மூன்று ஆள்களும் ஒரே ஞானமும், ஒரே வல்லமையும், ஒரே மாட்சியும் நிறைந்தவர்கள் என்று நாம் நம்புகிறோம். அத்துடன், இந்த மூன்று ஆள்களும் சரிசம வணக்கமும், மாட்சியும், ஆராதனையும் பெறுகின்றனர் என்றும் நாம் அறிகின்றோம்.

இந்த இறையியலின் பின்னணியில் நாமும் நாள்தோறும் மூவொரு இறைவனுக்கு வணக்கமும், மாட்சியும் செலுத்துவதைக் கடமையாகக் கொள்வோம். பொதுவாக நமது செபங்கள் இயேசுவை நோக்கியே சொல்லப்படுபவையாக இருத்தல் சரியன்று. இயேசு வழியாக, இறைத் தந்தையை நோக்கி அமைதல் சாலச் சிறந்தது. எனவே தான், திருப்பலியின் பெரும்பாலான மன்றாட்டுகள் இயேசு வழியாக, இறைத் தந்தையை நோக்கி எழுப்பப்படுவனவாக அமைந்துள்ளன. ‘எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்’ என்றே நிறைவடைகின்றன. ஆகவே, நாள்தோறும் மூவொரு இறைவனின் பெயரைச் சொல்லி, மூவருக்கும் சமமான புகழ்ச்சியும், நன்றியும், மாட்சியும் செலுத்தக் கற்றுக்கொள்வோமாக. வாழ்த்துக்கள்.

# பொது விடுமுறைத் திருப்பலி நேரம்

**29-05-2018 செவ்வாய் ~ விசாக தினம்**

அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை.

காலை **9** மணிக்கு ஆங்கிலத் திருப்பலி, காலை **10** மணிக்கு தமிழ் திருப்பலி

(மதியம் **12** மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)



# நற்கருணை ஆராதனை வழிபாடு

**03-06-2018 ஞாயிறு, மாலை 5:00 மணி**

திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு மணி நேரம் செலவிட்டு அவருடைய ஆசீரைப் பெறவும், நம் குடும்பங்களை ஒப்புக்கொடுக்கவும், குருக்களுக்காகவும், தேவ அழைத்தலுக்காக செபிக்கவும், உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.





# இடைவிடா சகாய அன்னை நவநாள்

**சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு** தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.





## நற்செய்தி பகிர்வு குழு நற்கருணை ஆராதனை



**03-06-2018 ஞாயிறு, காலை 11:00 மணி**

நாம் சுமக்கும் பாரங்களை ஆண்டவரிடம் இறக்கி வைத்து, திவ்விய நற்கருணையில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் ஆசீரைப் பெற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

## முழு இரவுத் திருவிழிப்புச் செப வழிபாடு

**09-06-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை**

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை ஆண்டவரிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.



## ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல்

**வரும் 15-06-2018 ஞாயிறு காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை**

நமது ஆலயப் பணிக்குழுக்களின் ஒன்றுகூடல் (Parish Assembly) நடைபெறும். இந்த ஆலயத்திற்கு வருவோர் பலர் வெகு தொலைவிலிருந்து வருகிறீர்கள் என்று நாங்கள் அறிவோம். ஆயினும், நீங்களும் இந்த ஆலயத்தின் உறுப்பினர், இதன் வளர்ச்சியிலும் செயல்பாட்டிலும் உங்களின் அக்கறையும் ஆர்வமும் எங்களுக்குத் தேவை. சிறு துளிகள் பெரு வெள்ளமாகிறது. பல சின்னஞ்சிறு விளக்குகளாகிய நாம் ஒன்று சேர்ந்தால் தான் இந்த சிங்கப்பூர் தேச மக்களுக்குப் பிரகாசமான ஒளியாகலாம். எனவே நமது திருச்சபையைக் கட்டியெழுப்ப நாம் அனைவரும் ஒன்று கூடுவோம். இதில் பங்கு கொள்ள விரும்புவோர் உங்கள் பெயர்களை ஆலய அலுவலகத்தில் **04-06-2018**க்குள் பதிவு செய்யுங்கள். மதிய உணவும் தேனீரும் வழங்கப்படும்.



## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பி | ள | வு | ற் | ற | ர் | ல் | யா | வி | ஆ |
| லி | ரு | ய | க் | றை | ன் | சா | ச் | க | ந் |
| னே | னொ | நெ | ப | ணி | யா | ள | ம் | ஒ | க |
| ர் | தி | ரு | மு | ழு | க் | கு | லு | லை | தா |
| யூ | ப | ப் | லு | தை | க் | வே | யி | ம | த் |
| அ | தி | பி | பு | ளு | ய் | ஞா | சி | வி | சொ |
| ரி | மை | ன் | க | ள | து | வி | ட் | ற | ச் |
| யை | மை | ளை | உ | யா | லா | க | மா | வு | மை |
| ண | ள் | தூ | ட் | உ | ல் | றை | லி | ழி | ரி |
| பி | வி | ஆ | ம் | று | பே | ப் | மை | ரி | உ |

1. அவரோடு __________ பங்கு பெறுவோம்.
2. நாம் கடவுளிடமிருந்து __________ பெறுபவர்கள்.
3. கடவுளின் __________ இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்.
4. தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் __________க் கொடுங்கள்.
5. ஆண்டவர் தமது __________த் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.
6. உங்களுக்கும், உங்களுக்குப் பின்வரும் __________ எல்லாம் நலமாகும்.
7. __________ நடுவிலிருந்து பேசிய கடவுளின் குரலொலியைக் கேட்டீர்கள்.
8. __________ சீடர்களும் இயேசு தங்களுக்குப் பணித்தபடியே ஒரு மலைக்குச் சென்றார்கள்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதலாம் வாசகம்:** | இணைச்சட்டம் **4 : 32 – 34, 39 – 40** |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் **33 : 4, 5, 6, 9, 18, 19, 20, 22** |
| **பதிலுரை:** | ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர். |
| **இரண்டாம் வாசகம்:** | உரோமையர் **8 : 14 – 17** |
| **நற்செய்தி வாழ்த்தொலி:** | அல்லேலூயா! அல்லேலூயா! இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள், தந்தை, மகன், தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா! |
| **நற்செய்தி வாசகம்:** | மத்தேயு **28 : 16 – 20** |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் **12:30 &** மாலை **6:30** மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை **6:00 & 7:30** மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை **7:30, 11:30 & 1:00** மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை **9:30 &** மாலை **6:30** மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை **9:00** மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை **10:00** மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் **11:55** மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை **5:55** மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை **7:00** மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை **7:45** மணி |
| தமிழ்   | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை **11:30** மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை **6:00** மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை **8:30** மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் **2:00** மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை **5:30** மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை **4:30** மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை **4:30** மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை **5:45** மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை **8:00** மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் **23**ம் தேதி இரவு **8:30** மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.